பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 19] சென்னை : ஐப்பசி 11 (28—10—71) வியாழன் வெளியூர் : ஐப்பசி 12 (29—10—71) வெள்ளி [இதழ் : 112

அடுத்த உலகத் தமிழ் மாநாடு

ஈழத்தில் நடத்த ஏற்பாடு

கொழும்பு, அக். 28—
நான்காவது உலகத் தமிழ் மாநாடு, யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

இம்மாநாட்டுக்கு உலகின் பல் வேறு பகுதிகளிலிருந்தும் தமிழறிஞர்கள் பலர் வருவார்

(4-ம் பக்கம் பார்க்க)

என் பெயருக்காகக் கிளர்ச்சி வேண்டாம்

அரவிந்தர் பெயரால் பல்கலைக் கழகம் உருவாவதை எதிர்க்காதீர்

புதுவை மாணவர்களுக்குத் தமிழக முதலமைச்சர் கலைஞர் அறிவுரை

சென்னை, அக். 28—

"ஆராய்ச்சி மாணவர்கள் நடத்தும இந்த விழாவில் மாணவர்களுககு எனது ஆலோசனைகளைச் சொல்லிக்கொள்வது சாலச் சிறந்த ஒன்ருகும்; பல்கலைக்கழக மாணவர்களாயினும் -- கல்லூரி மாணவர்களாயினும் -- உயர்நிலைப் பள்ளி மாணவர்களாயினும, 'தங்களுடைய எதிர்கால வாழ்வு இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக' என எண்ணிப் பணியாற்றத் தங்களை உயர்த்திககொள்ள வேண்டும; ஆனால் இன்றையத தினம் சிற்சில இடங்களில் தேவையில்லாத பிரச்சினைகளுக்கெல்லாம் கிளர்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

"நாடு விடுதலையடைய வேண்டும் என்பதற்காகக் காந்தியார் 'மாணவர்கள் கல்வி கற்பதைக்கூட நிறுத்திவிட்டுக் கிளர்ச்சியில் ஈடுபடவேண்டும்' என்று கூறினர்; அது, நாட்டிற்கான கிளர்ச்சி!

"நாட்டைப் போன்றே மொழியும்; ஆகவே, தமிழகத்தில், தாய்மொழி காக்க மாணவர்கள் மொழிப் போராட்டத்தில ஈடுபட்டார்கள்; அந்தப் போராட்டத்தில்கூட, 'வன்முறை இம்மியும் தலைகாட்டக் கூடாது' என்பதில், மொழிப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள் கண்ணுங்கருத்துமாக இருந்தார்கள்!

"ஆனால் இப்போது, பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சினைகளுக்குக்கூட -- பல்கலைக் கழகத துணைவேந்தரிடமோ, கலலூரி முதல்வரிடமோ பேசித் தீர்ததுக்கொள்ளத்கூடிய பிரச்சினைகளுககுக்கூடப் போராட்டம் துவக்கி -- அது வன்முறையில் சென்று அசம்பாவிதங்கள் ஏற்பட வழிவகுப்பது நாட்டு நலனுக்கு உகந்ததலல!

"பாண்டிச்சேரியில், மத்திய அரசின் மத்தியப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கப்படவிருககிறது; அதற்கும் -- அங்குள்ள மாநில அரசுக்கும் சம்பந்தமில்லை; 'அந்தப் பலகலைக் கழகம அரவிந்தர் பெயரில் அமைக்கப்படக கூடாது' என்றும், 'அந்தப பெயரில் அமைத்தால் பாண்டிச்சேரியிலுள்ள அரவிந்த ஆசிரமத்தாரே ஆதிக்கம் செலுத்துவார்கள்' எனறும் கூறி, அந்த மாணவர்கள் எதிர்ப்பதாகப் பத்திரிகைச் செய்தி வெளியிட்டிருக்கிருர்கள்!

"அவசரப்பட்டுப் பத்திரிகைக்காரர்கள், இன்னொரு செய்தியையும் போட்டிருககிருர்கள்; அந்தக கிளர்ச்சிககாரர்கள், 'அரவிந்தர் பல்கலைக் கழகம் என்ற பெயர் கூடாது; கலைஞர் கருணாநிதி பல்கலைக் கழகம் எனறு பெயரிடவேண்டும்; என்று கிளாசசி நடத்துகிருர்கள' என்று!

"உடனே நான், புதுவை முதல்வர் நண்பர் பாருக் அவர்களிடமும -- அமைச்சர் துராமசாமி அவர்களிடமும் தொடர்பு கொணடு விவரம் அறிநதேன்; 'அரவிந்தர் ஆசிரம நிர்வாகம கூடாது' என்பதுதான் மாணவர் கோரிக்கை என்று அறிந்தேன்.

"கருணாநிதி பல்கலைக் கழகம் -- என்ற பெயர் வைக்க வேண்டும எனறு கேட்பவர்கள், 'பழைய காங்கிரசு மாணவர்களும் -- தி. மா. மு. க. மாணவர்களுமதான்' எனறு செய்தி வந்துருககிறது; நிச்சயமாக இது உண்மையாக இருக்காது; 'பழைய காங்கிரசு மாணவர்கள அப்படிச் சொல்லியிருக்கமாட்டார்கள்' என்று நிசசயித்துக கொண்டேன.

"எது எபபடியிருந்தாலும், இதில் என் பெயரை இழுத்திருப்பதால், என்னுடைய கருததை நான சொல்லுவது இனறியமையாததாகும்.

"இந்தியச் சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டவர் அரவிந்தர் -- அதற்காகப் போரிட்டவர்; அவ்விதம் சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர் அங்கு வந்து சாதனைகள் பல புரிந்தார்; நமது போற்றுதலுக்கும் -- வாழ்த்துதலுக்கும் உரியவர் ஆனர்; ஆகவே, அத்தகைய பெரியாரின் பெயரை மாற்றி என் பெயரை வைக்க வேண்டும் என்பது சரியல்ல!

"அதற்காகக் கிளர்ச்சி செய்யும் மாணவர்கள் சார்பாக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்; அப்படிப் பெயர் வைக்க வேண்டும் என நடத்தப்படும் கிளர்ச்சி கைவிடப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

"இதை மீறி அந்தப் பல்கலைக் கழகத்துககு என் பெயர் வைக்கப்பட்டால், அதைக் கடுமையாக மறுக்கிற முதல் ஆளாக நான் இருப்பேன்.

"பத்திரிகையில் வெளிவந்த இந்தச் செய்தி, நமது எதிர்ப்பாளருக்கு மிகப் பெரிய வேட்டையாகப் போய்விடக்கூடும் என்பதால், இதை முன்கூட்டித் தெரிவிக்கிறேன்; 'கருணாநிதிதான் தூண்டிவிட்டு இதைச் செய்தார் -- ஐயோ -- அரவிந்தர் பெயர் வைக்கக் கூடாதாம்' என்றெல்லாம் அவர்கள் எழுதக்கூடும்.

"மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம்கூடத் தெரிவித்திருக்கிருர் -- இந்தப் பல்கலைக் கழகத்திற்கும் -- அரவிந்த ஆசிரமத்திறகும் தொடர்பில்லை; தனிக் குழுதான் இந்தப் பல்கலைக் கழகத்தை நடத்தும்' என்று!

"இதுபோன்ற பிரச்சினைகளைப் பேசித் தீர்க்காமல் -- பூசல் உண்டாக்கும் அளவுக்குக் கருவியாகப் போய்விடாமல் மாணவர்கள் இருக்கவேண்டும; கலந்து உரையாடினல் -- தேவைகளைக் கேட்டால், அதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்யும் அரசு இங்கே இருக்கிறது என்பதை உணர்ந்து அவர்கள் பணியாற்றிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

—முதலமைச்சர் கருணாநிதி

(பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்கள் நடத்தியபாராட்டு விழாவில்

தவருன அச்சத்துக்கு ஆட்பட வேண்டாம்

மாணவர்களுக்கு புதுவை முதல்வர் எம். ஓ. எச். பாருக் வேண்டுகோள்

அச்சத்தைத் தவிர்க்கும் வகையில் உறுதிமொழி

புதுவை, அக். 28—
இங்கு, கடந்த இரு வாரங்களாக மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்து வருவதையொட்டி, தாகூர் கலைக் கல்லூரி, மோதிலால் நேரு தொழிற் பயிற்சிப் பள்ளி மற்றும் மாலைக் கல்லூரிகளை உடனடியாக மூடும்படி புதுவை அரசு உத்தரவிட்டிருக்கிறது.

புதுவையில் புதிதாக அமைக்கப்படும் பல்கலைக் கழகத்துக்கு 'அரவிந்தர் பல்கலைக் கழகம்' என்று பெயர் வைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

புதிய பல்கலைக் கழகத்துக்கு அரவிந்தரின் பெயரைச் சூட்டுமாறு அனைத்துக் கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஒப்புதலையும் பெற்றுப் புதுவை அரசு, மததிய அரசுக்குப் பரிந்துரைத்திருககிறது.

இந்தப் பெயர் வைக்கப்படுவதால், இப்பலகலைக் கழகம் அரவிந்தர் ஆசிரமத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரக்கூடும் -- எனத் தவருகக் கருதி, மாணவர்கள் வேலைநிறுத்தம செய்துவருகின்றனர்; இதனல், அதற்கு இப்பெயர் வைப்பதை மாணவர்கள் எதிர்க்கின்றனர் என்று கூறப்படுகிறது.

முதல்வர் விளக்கம்

மாணவர்களின் இந்தத் தவருன அச்சத்தைப் போக்கி, முதலமைச்சர் எம். ஓ. எச். பாருக் விளககம் அளித்துள்ளார்.

பல்கலைக் கழகம் அமைப்பது என்று நாடாளுமன்றத்தில் முடிவு செய்யப்பட்டதாகும் என்றும், எந்தப் பெயர் இருந்தாலும், பல்கலைக் கழகத்துக்கும் -- அரவிந்தர் ஆசிரமததுக்கும் எவ்விதத் தொடர்பும் இலலை என்றும் புதுவை முதலமைச்சர் தெரிவிததிருக்கிருர்.

இந்தப் பல்கலைக் கழகத்தில் பட்ட மேற்படிப்புக்கான 50 சதவிகித இடங்கள் இந்தப் பகுதியினருக்கு ஒதுக்க வேண்டுமென்று மாநில அரசு, மத்திய அரசிடம் கோரியிருப்பதாகவும் முதலமைச்சர் பாருக் தெரிவித்தார்.

திராவிடக் கலாச்சாரத்தைப் பேணுவதிலும் — திராவிட மொழி ஆய்வுக்கு வழி செய்வதிலும் பல்கலைக் கழகம் கவனம் செலுத்தும் என்று கருதுவதாகவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தப் பல்கலைக் கழகத்தில், சமஸ்கிருதம் -- இந்தி ஆகியவை புகுத்தப்படமாட்டாது என்பதற்கான உறுதிமொழியை அரசு தரவேண்டுமென்றுகோரி மாணவர்கள் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்.

தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளுக்கு இடமளிக்க வேண்டுமென்றும் மாணவர்கள் கோருகின்றனர்.

எல்லையில் நிலவும் நெருக்கடி

இந்தியாவின் கவலை -- இரஷ்யாவும் பங்கு பெறுகிறது

புதுடில்லி, அக். 28—
"எல்லையில் ஏற்பட்டுள்ள அபாயம் குறித்து இந்தியா கொண்டுள்ள உணர்ச்சியில் இரஷ்யாவும் பங்கு கொள்ளுகிறது" என்று நேற்று வெளியிட்ட இந்தியா இரஷ்யக் கூட்டு அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

துணைக் கண்டத்தில் இருந்து வரும் நிலைமையை இருநாடுகளும் முழுமையாக மதிப்பீடு செய்திருப்பதாகவும் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் பதட்ட நிலைமை நிலவும் நெருக்கடியான இந்த நேரத்தில், இரஷ்யத் துணை வெளிநாட்டு அமைச்சர் நிகோலாவ் பிர்யுபின் என்பவர் டெல்லிக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தியதற்குப் பிறகு இந்தக் கூட்டறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆனால், தங்களது மதிப்பீடு என்ன என்றோ, அமைதிக்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தைச் சமாளிக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றோ வரையறுத்துக் கூறவில்லை.

சூ - யென் - லாய்க்கு இந்திரா தந்தி

'ஆசியாவில் அமைதி நிலவும்' என்று நம்பிக்கை

வியென்ன, அக். 28—
கம்யூனிஸ்டுச் சீனவை அனுமதிப்பதென்று ஐ.நா. நிறுவனம முடிவு செய்திருப்பதையொட்டி சீனத் தலைமையமைச்சர் சூ-யென லாய்க்கு இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி தந்தி மூலம் பாராட்டுச் செய்தி அனுப்பினர்.

"ஐ.நா.-வில் இந்தியாவும்—சீனவும ஒத்துழைப்பதன் மூலம் ஆசியாவில் அமைதிக்கும், முன்னேற்றத்துக்கும் உதவ முடியும்" என்று இந்திரா காந்தி நம்பிக்கை தெரிவித்தார்.

"ஐ.நா.-வில் சீன இடம் பெறுவதன் மூலம் அது மேலும் பிரதிநிதித்துவ அமைப்பாக ஆவதுடன், ஐ.நா.-வில் ஆசியாவின் சக்தியும பெருகும்" என்று அவர் கூறினர்.

அதிர்ச்சிக்குள்ளான அமெரிக்கா

பழி தீர்த்துக் கொள்ளத் திட்டமாம்!

வாஷிங்டன், அக். 28—
ஐ.நா. சபையில தைவான் நாட்டை வெளியேற்றும் தீர்மானம் நிறைவேறியது, அமெரிக்காவுக்கு மிகவும் ஆத்திரத்தை உண்டாக்கியிருக்கிறதாம்.

இதனல் ஐ.நா. சபைக்கு அளித்து வரும ஆதரவையும், வெளிநாட்டு உதவியையும் அமெரிககா குறைத்துவிடக்கூடுமாம். இதை, அமெரிகக அதிகாரி ஒருவர் சூசகமாக வெளியிட்டிருக

(5-ம் பத்தி பார்க்க)

(1-ம் பத்தித் தொடர்ச்சி)

கிருர்.

அமெரிக்காவின் விருப்பத்திற்கு மாருக, தைவானை வெளியேற்ற வாக்களித்த பல நாடுகளும், அமெரிக்க உதவியைப் பெற்று வருபவையாகும்.

யாகியா கான் இராணுவ ஆட்சி தவறு இழைத்தால்....

'பாகிஸ்தான் மண்ணிலேயே போர் நடைபெறும்'

'பிடித்த இடங்களை இந்தியா விட்டுத் தர இயலாது'

தற்காப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் திட்டவட்ட அறிவிப்பு

பிரோஸ்பூர், அக். 28—

" இந்தியாவைத் தாக்குவதென்ற தவற்றைப் பாகிஸ்தான் இழைக்குமானால், பாகிஸ்தான் மண்ணிலேயே போர் நடைபெறும்; ஏதாவதொரு இடத்தைப் பிடித்துக்கொண்டால் இந்தியா அதைக் கைவிடாது"

என்று தற்காப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம், பிரோஸ்பூர் மாவட்டத்திலுள்ள முன்னணிப் பகுதி ஒன்றில் போர் வீரர்கள் கூட்டத்தில் பேசுகையில் திட்டவட்டமாக அறிவித்தார்.

எல்லைப்புறக் கிராமங்களைக் காலி செய்யமாட்டோம்

தற்காப்பு அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது:—

" இந்தியாவின் எல்லைப் புறக் கிராமங்கள் காலி செய்யப்படமாட்டாது; ஆனால் பாகிஸ்தானிலோ, மக்கள், எல்லைப்புறப் பகுதிகளையெல்லாம் காலி செய்துவிட்டுப் போய்விட்டார்கள்; போர் மூளுமானால், பாகிஸ்தானை நமது இராணுவம் நொறுக்கிவிடும் என்ற நம்பிக்கை நமது மக்களுக்கு இருந்து வருகிறது."

டையதாகவே இருக்கும்"

என்று பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம், டெலிவிஷன் பேட்டி ஒன்றில் திட்டவட்டமாகத் தெரிவித்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

" எப்போதுமே இந்தியா அமைதியைத்தான் விரும்பிவந்திருக்கிறது; போரை அது விரும்பவில்லை; அதனால்தான் அயல்நாட்டுச் சுற்றுப்பயணத்தைக்கூடத் தலைமையமைச்சர் ஒத்திவைக்காமல், திட்டமிட்டபடி மேற்கொண்டிருக்கிறார்.

" இந்தியா எப்போதுமே தற்காப்பு நிலையைத்தான் மேற்கொண்டு வந்திருக்கிறது; ஆனால் இந்தியா தாக்கப்பட்டால், இந்தியாவின் எல்லையிலோ அல்லது இந்திய மண்ணிலோ மட்டுந்தான் போரிடுவோம் என்பது இதன் அர்த்தமல்ல!

" 'தற்காப்பு' என்றால், 'ஆக்கிரமிப்பாளனை அவனது பகுதிக்குள் விரட்டியடிப்போம்' என்பதாகும்; எனவே இது, ஆக்கிரமிப்பு ஆகாது.

" கான் ஏற்கனவே சொன்னது போல், போரிட வேண்டும் என்று எங்களுக்கு ஆசை இல்லை; நாங்கள் தாக்கப்பட்டால் எங்கள் நாட்டை நாங்கள் பாதுகாப்போம்!

" இந்தியாவின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து -- இங்கு சமூக நெருக்கடியைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற நச்சு எண்ணத்துடன், யாகியா கான், தனது நாட்டின் குடிமக்களில் 95 இலட்சம் பேரை இந்தியாவுக்குள் விரட்டாமல் இருந்திருப்பின், இது, நாங்கள் கவலைப்பட வேண்டிய பிரச்சினையாக இருந்திருக்காது.

" கிழக்கு வங்கத்தில் சில பகுதிகளை விடுவிப்பதில் விடுதலைப் படையினர் வெற்றியடைந்தால் இந்தியாவுடன் முழு அளவில் போர் நடத்துவோம்" என்று யாகியா கான் மிரட்டியிருக்கிறார்; அதையொட்டி அவர், மேற்கு எல்லையின் தண்டுப் பகுதிகளில் படைகளை அனுப்பிவைத்திருக்கிறார்; இந்த நிலைமையில், எந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சரும், தனது நாட்டின் எல்லைகளைப் பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் இருக்கமுடியாது."

மறக்க முடியாத பாடம் பாகிஸ்தானுக்குக் கிடைக்கும்

டெரோஸ்பூர், அக். 28—

" போர் வெறியில் -- அறிவீனமான செயலில் இறங்காமலிருக்கப் பாகிஸ்தான் அதிபர் யாகியா கானுக்கு இறைவன் நல்ல அறிவைக் கொடுக்கட்டும்.

" இந்தியாமீது பாகிஸ்தான் தாக்குதலை நடத்துமானால், மறக்க முடியாத பாடம் பாகிஸ்தானுக்குக் கிடைக்கும்"

என்று, பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம், இங்கு கல்லூரி விழா ஒன்றில் உரையாற்றுகையில் எச்சரிக்கை செய்தார்.

அமைதியையே இந்தியா என்றும் விரும்புகிறது

எங்களைத் தாக்கும் ஆக்ரமிப்பாளர்களை விரட்டியடிப்போம்

புதுடில்லி அக். 28—

" போர் மூண்டால் அதற்கு முழுப் பொறுப்பும் பாகிஸ்தானு

இலஞ்ச ஒழிப்பு நடவடிக்கை

தண்டனைக்குள்ளான அரசு ஊழியர்கள்

1971 ஜுன் 30-ம் தேதியுடன் முடிவடைந்த காலாண்டுக் காலத்தில் இலஞ்ச ஊழலில் ஈடுபட்டதற்காகத் தண்டிக்கப்பட்ட அரசு ஊழியர்கள் விவரம் வருமாறு:—

பொதுப் பணித்துறையைச் சேர்ந்த ஒரு உதவிப் பொறியாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

அதே துறையைச் சேர்ந்த இரு மேற்பார்வையாளர்கள் வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

வருவாய்த் துறையைச் சேர்ந்த ஒரு தாசில்தார், துணைத் தாசில்தாராக பதவிக் குறைப்புச் செய்யப்பட்டார்.

நல்வாழ்வு -- குடும்ப நலத் துறையைச் சேர்ந்த ஒரு டாக்டரும் மகப்பேறு மருத்துவ உதவியாளரும், நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த ஒரு உதவிப் பொறியரும் ஓராண்டுக கால ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டது.

உள்ளாட்சிக் கிராம வளர்ச்சித் துறையைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றிய தலைமை எழுத்தரின் ஓராண்டு ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டது.

சுகாதாரத் துறையைச் சேர்ந்த மகப்பேறு மருத்துவ உதவியாளர் ஒருவரின் ஊதிய உயர்வு 6 மாத காலத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டது

நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த ஒரு கோட்டப் பொறியரின் ஊதியத்திலிருந்து ரூ. 143.75 பிடித்தம் செய்யப்பட்டது.

பொதுப் பணித் துறையைச் சேர்ந்த ஓர் உதவிப் பொறியர், ஓர் இளநிலைப் பொறியர், ஒரு மேற்பார்வையாளர், ஒரு போலீசு சப்-இன்ஸ்பெக்டர், சுகாதாரத் துறை உதவி இயக்குநர் ஒருவர் ஆகியோர் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினருக்கு டில்லியில் வீட்டு மனையா?

'தேவையில்லை' என தி.மு.க. உறுப்பினர் எஸ். டி. சோமசுந்தரம் எதிர்ப்பு

'ஏழைகளுக்கென ஏற்பட்ட வசதியை வீணாக்க வேண்டாம்' என்ற கருத்து ஏற்கப்பட்டது

" நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு டில்லி மாநகரில் வீடு கட்டிக் கொள்வதற்காக வீட்டு மனை வழங்க வேண்டும்" என்ற கருத்து, வீட்டு வசதி அமைச்சக ஆலோசனைக் குழுவின்முன் கொண்டுவரப்பட்டது; அதுபோது, நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

" நாடாளுமன்ற உறுப்பினரும் ஓரளவிற்கு வசதி பெற்றவர்களாக இருக்கக்கூடும்.

சொந்த ஊர்—மாவட்டம் அல்லது மாநிலத்தில் அவர்களுக்கு எப்படி தங்குவதற்கு வீடு இருக்கக்கூடும்.

ஆனால், இந்த வீட்டு மனை வழங்கும் திட்டம், வீடு இல்லாதவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது; நாடாளுமன்ற உறுப்பினர்கட்கு இதனைக் கொடுப்பதனால், திட்டத்தின் குறிக்கோளுக்கு விரோதமான நடவடிக்கையில் ஈடுபடுத்துவதாகும்.

டில்லி நகரில் -- இன்னும் சொல்லப்போனால்—யாரும் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கப்போவதில்லை; நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிக் காலம் முடிவுற்றபின் டில்லியிலேயே நிரந்தரமாகக் குடியேறப்போவதில்லை.

ஆகவே, நாடாளுமன்ற உறுப்பினர்கட்கு வீடு கட்டும் மனை, டில்லியில் கொடுக்கத் தேவையில்லை."

இக்கருத்தை அமைச்சர் திரு. குஜராலும் பெரும்பான்மையான உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டனர்.

பிறகு, 'வீட்டு மனை எங்குமே இல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே டில்லியில் வீட்டு மனை தரலாம்' என்று ஆலோசனைக் குழு முடிவு செய்தது.

தைவான்--தனித்து இயங்குமா?

சியாங்--கே--ஷேக் ஆட்சியின் எதிர்காலம்?

'தேசிய சீனு' என்ற பெயரில் இதுவரையில் ஐ. நா.-வில் உறுப்பினர் நாடாக இருந்து வந்த தைவானின் எதிர்காலம் கேள்விக்குறியாக ஆகிவிட்டது!

" ஐ. நா.-விலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டாலும், அதன் சுதந்தரம பறிபோகவில்லை" என்ற நிலையில், ஐ. நா.-வில் மீண்டும் அது இடம்பெற முயற்சிக்கும் எனத் தோன்றவில்லை!

" தைவான் தனி நாடு அன்று --- அது, சீனுவின் பகுதியே" என்று வலியுறுத்தி -- பீகிங் அரசாங்கம் உடனடியாகப் படைபலத்தைப் பயன்படுத்தி அதைக் கைப்பற்ற முயற்சிக்கும் எனக் கருதுவதற்கு இன்றைய நிலையில் இடமில்லை!

" தைவான் -- சுதந்தர நாடாக இனியும் இயங்க இயலுமா" என்பதே இன்றையக் கேள்விக் குறியாகும்; இதனைத் தொடர்ந்து, தைவானின் உளம் -- நிலைபற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமல்லவா?

தைவான் -- பல தீவுகள் சேர்ந்த நாடு; அவற்றில் ஒன்றாகிய 'பெங்கடோரஸ்', சீனுவிலிருந்து 25 மைல் தொலைவில்தான் இருக்கிறது.

தைவான் தீவின் நிலப்பரப்பு 13,885 சதுரமைல்; நீளம் வடக்கு தெற்காக 240 மைல். கிழக்கு மேற்கில் 85 மைல்.

மக்கள் தொகை 140 இலட்சம்; இவர்களில் 80 சதவிகிதத்தினர், பல நூற்றாண்டுகளாக இங்கு வசித்துவரும் பழங்குடி மக்களும் -- பழங்காலச் சீனர்களுமாவர்.

சென்ற நூற்றாண்டில் இது ஜப்பான் வசமாயிற்று; 1945-ல், இரண்டாவது உலகப் போரை அடுத்து சீனவுக்குத் திருப்பித் தரப்பட்டது.

1949-ல் கம்யூனிஸ்டுகளிடம் தோல்வியுற்ற சியாங் – கே – ஷேக், இதைத் தமது புகலிடமாக்கிக்கொண்டார்; அவருடன் சுமார் 20 இலட்சம் சீனர் வந்து விட்டனர்.

இங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலைமை ஆசியாவிலேயே மிக உயர்ந்தது என்று சொல்லலாம்.

விளைச்சல் 135 சதம் உயர்ந்துள்ளது; தொழில்கள் 10 மடங்கு பெருகியுள்ளன; தனது உணவுத் தேவையை நிறைவு செய்துகொண்டு கணிசமான அளவில் அரிசியைத் தைவான் ஏற்றுமதி செய்கிறது; அதன் ஏற்றுமதிகளில் 90 சதம் ஆலைப் பொருட்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு ஆண்டுதோறும் வளர்ச்சி வேகம் வேளாண்மையில் 4.90 சதவிகிதமும், தொழில் துறையில் 14.50 சதவிகிதமுமாக இருந்துவருகிறது.

சனநாயகம் முழு அளவில் மலர்ச்சி பெறவில்லை என்றாலும், நிலையான நல்லாட்சி இங்கு நடைபெறுகிறது எனக் கூறப்படுகிறது.

கட்டாய இராணுவச் சேவைத் திட்டத்தின்கீழ் ஆறு இலட்சம் பேர் போர் வீரர்கள் உள்ளனர்.

பாதுகாப்புக்கு வேண்டிய கடற்படையும் விமானப் படையும் இருந்துவருகின்றன.

இந்தக் காரணங்களால், இப்போதைக்கு தைவான் தொடர்ந்து தனிச் சுதந்தர நாடாகச் செயல்பட்டுவரும் என்றே தோன்றுகிறது.

இங்குள்ள ஆட்சியாளர்கள் கம்யூனிசத்திற்கு எதிரிகளாவர்; எனவே, பீகிங்கிடம் எளிதில் பணியமாட்டார்கள்.

அமெரிக்காவும் தைவானை அடியோடு நிராதரவாக விட்டுவிடாது; ஆனால் பீகிங்—அமெரிக்க உடன்பாடு முழு அளவில் ஏற்படுமாயின் அதன் விளைவுகள் எவ்வாறு இருக்குமென்பதைப் பொறுத்தே இருக்கிறது!

எண்ணெய் ஊற்றுக்கள் கண்டுபிடிப்பு

கடற்கரை நெடுகிலும் பணிகள் தொடங்கும்

பரோடா, அக். 28—

" எண்ணெய் ஊற்றுகளைக் கண்டுபிடிப்பதற்கான நிலவள ஆய்வு அடுத்த ஆறு மாதங்களுக்குள் தொடங்கப்படும்; கோதாவரி -- காவிரி பாயும் பகுதிகளிலும், டாமனிலும், மற்றுமுள்ள கடலோரப் பகுதிகளிலும் எண்ணெய் ஊற்றுத் தோது கண்டுபிடிப்புப் பணி நடக்கும்"

என்று எண்ணெய் வள இரசாயனப் பொருள் துணையமைச்சர் பி. சி. சேத்தி தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

" இந்தப் பணியை நாட்டின் கடற்கரை நெடுக நடத்துவதற்கான திட்டம் வகுக்கப்படுகிறது

இப்பணிக்காக நில அதிர்ச்சிப் பதிவுக் கருவி பொருத்தப்பட்ட கப்பல் வாடகைக்கு அமர்த்தப்படுகிறது.

நாட்டில் இப்போதுள்ள எண்ணெய் வயல்களில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஆலோசனைகள் கூறவும் -- திட்டம் வகுக்கவும் உயர்தர ஆலோசகர் ஒருவரின் சேவையைப் பெற்றிருக்கிறார்.

நாட்டிலுள்ள எண்ணெய் வயல்களிலிருந்து சுமார் 13 கோடி டன் எண்ணெய் கிடைக்கிறது; இதில் மேற்கத்தி வயல்களிலிருந்து கிடைப்பது 8.15 கோடி டன்.

இந்தியா--பாகிஸ்தான் கடற்படைகள் மோதுமா?

நீர்மூழ்கிகளால் ஏற்படும் விளைவு

இந்தியக் கடற்படைத் தளபதி அறிவிப்பு

ஆமதாபாத், அக். 28—

" இந்தியாவுக்கும் -- பாகிஸ்தானுக்கும் இடையே போர் மூண்டால், சிறந்த முறையில் மேம்பாடு அடைந்துள்ள இந்தியக் கடற்படைக்கு எதிராகப் பாகிஸ்தான் கடற்படை, கராச்சியிலிருந்து வெளியில் புறப்பட முயற்சிக்காது"

என்று இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் நந்தா, தெளிவுற விளக்கினார்.

" இந்தியக் கப்பல்களுக்கும் -- துறைமுகங்களுக்கும் பாகிஸ்தானிய சப்மரீன்களால் அபாயம் ஏற்படுவது இயலக்கூடியதே" என்பதை அவர் சூசகமாகக் குறிப்பிட்டார்; 'ஆனால் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த நாசகாரிகள் பாகிஸ்தான் சப்மரீன்களை வேட்டையாடி அழிக்கும்' என்று உறுதி கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

" பாகிஸ்தான் சப்மரீன்களின் நடவடிக்கைகளுக்குப் பதில் நடவடிக்கையாக, மேற்கு பாகிஸ்தானுக்கும் --- கிழக்கு பாகிஸ்தானுக்குமிடையே உள்ள எல்லாத் தொடர்புகளையும் இந்தியக் கடற்படைத் துண்டித்துவிடும்.

" எந்த நாட்டிடமிருந்தும் எத்தகைய உதவியும் கடல் வழியாகக் கிழக்குப் பாகிஸ்தானுக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது; அந்தப் பகுதியில் உள்ள பாகிஸ்தானியப் படைகள் நடமாட முடியாமல் சிக்கிக்கொண்டு தவிக்கும்.

1965-ம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரின்போது துவாரகையைப் பாகிஸ்தான் கப்பல்கள் சுட்டது பற்றி அவர் குறிப்பிட்டார்; 'அத்தகைய நடவடிக்கை சொற்ப பலனுடையதாகத்தான் இருக்கும்' என்றார்; அவர் மேலும் கூறியதாவது:—

" பாகிஸ்தான் கடற்படையில் நான்கு பெரிய சப்மரீன்கள் இப்போது இருக்கின்றன; இவற்றில் மூன்று பிரான்சு நாட்டிலிருந்து புதியதாக வாங்கப்பட்டவை; ஒன்று ஏற்கனவே அமெரிக்காவிடமிருந்து வாங்கப்பட்டது; இவை நீங்கலாகப் பாகிஸ்தானிடம் சிறு சப்மரீன்கள் உள்ளன; சரக்குக் கப்பல்கள்-- துறைமுகங்களைத் தாக்க இந்தச் சிறிய சப்மரீன்கள் பயன்படுத்தப்படுபவையாகும்.

இந்தியாவிடம் சப்மரீன்களும், கப்பல்களும் உள்ளன; அவை மட்டுமன்றி, ஏவுகணைகளுடன் கூடிய ஸ்குவாட்ரன்களும் உள்ளன; சாதாரணப் போர்க் கப்பல்களுக்கு இவை பெரும் அபாயத்தை விளைவிக்கக்கூடியவை.

ஈரான்--பாகிஸ்தான் கூட்டு ஒத்திகை

இந்துமாக் கடலில், ஈரானும் -- பாகிஸ்தானும் கூட்டாக ஒத்திகைகள் நடத்துகின்றன; மிக அண்மையில், இத்தகைய தொரு கூட்டு ஒத்திகை நடைபெற்றது.

பாகிஸ்தானுக்கு இராணுவச் சாதனங்களை ஈரான் அனுப்பக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கவே செய்கிறது."

எல்லை நெடுகிலும் படை நிலைகள்

இராணுவத்துக்கு உத்தரவு

" இந்தியா -- பாகிஸ்தான் எல்லைகளில் பாகிஸ்தான் இராணுவப் படைக் குவிப்பு பலமாக இருப்பதைக் கருதி, எல்லை நெடுகிலும் படை நிலைகளை ஏற்படுத்திக் கொள்ளுமாறு இந்திய இராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது."

தற்காப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் இத்தகவலை வெளியிட்டார்.

புதுமுறை ஆக்கிரமிப்பில் பாகிஸ்தான்

நாதியற்ற மனிதர்களை ஆயுதமாகப் பயன்படுத்துகிறது

நிலைமை மோசமடைகிறது - போர் மூளுமா என்பதைச் சொல்வதற்கில்லை

பெல்ஜியத்தில் இந்திரா காந்தி நிலைமை விளக்கம்

பிரசல்ஸ், அக். 27—

" வங்காள தேசப் பிரச்சினை அண்டை நாட்டுக்கு எதிராக -- நாதியற்ற மனிதர்களை ஆயுதமாகப் பயன்படுத்தும் கோணல் புத்தியால் நேரிட்ட வினையாகும்.

" கிழக்கு வங்காளத்தில் நடப்பது, வழக்கமான உள்நாட்டுக் கலக முறையல்ல; இது, புது ரக ஆக்கிரமிப்பு; உலகம் இதைக் கவனிக்கத் தவறக்கூடாது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, அனைத்து நாட்டு உறவுக் கழகத்தில், 'இந்தியாவும் – உலகமும்' என்ற தலைப்பில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

" இப்போதைய நெருக்கடி, இந்தியாவுக்கும் – பாகிஸ்தானுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறினால் எழுந்ததல்ல; அதன் உள்நாட்டுப் பிரச்சினையிலிருந்து தோன்றியதாகும்; இதனால், இந்தியாவுக்கு மோசமான விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன.

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சி, அகதிகளை அச்சுறுத்திக் கொடுமைப்படுத்தியது; அதன் விளைவாக, எங்களுடைய அமைதியான வாழ்க்கையும் -- வருங்காலத் திட்டங்களும் பெரும் அளவில் பாதிக்கப்பட்டன.

எந்த அரசியல் தீர்வும் இனி பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால், வங்காள தேச மக்களால் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் ஏற்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

மேற்கொண்டு அகதிகள் வருவதைத் தடுக்கவல்லதும் -- ஏற்கனவே இந்தியாவுக்கு வந்துள்ளவர்கள் காலதாமதமின்றி தங்கள் வீடு வாசல்களுக்குத் திரும்பச் செய்யவல்லதுமான சூழ்நிலையை உண்டாக்குவது, சமாதானத்தில் அக்கறை கொண்ட எல்லோருக்கும் உண்டான பொறுப்பு ஆகும்.

இத்தகைய தகராறுக்கெல்லாம் அடிப்படை, பொருளாதார -- சமூக ஏற்றத் தாழ்வுகளே யாகும். எனவே, வசதிகளை ஒருங்கிணைப்பதன் மூலம், வறுமையை ஒழிக்க உலக முயற்சி தேவை.

ஐரோப்பிய சமுதாயம் உலகப் பிரச்சினைகளில் பங்கேற்பது, அதிகரித்து வருகிறது; இது பாராட்டுக்குரியதுதான்; ஆயினும், இதைவிடச் சிறந்த--மாறுபட்ட உலகத்தை உருவாக்குவதற்கு அறிவைப் பயன்படுத்தவில்லை; உலகப் பிரச்சினைக்கு ஒட்டுப்போட்டுச் சரிப்படுத்தி வருவதாகவே தோன்றுகிறது; ஒட்டுப் போடும் செயல் நீண்ட நாள் நிலைக்காது."

கொடூரமான நடவடிக்கையால் ஏற்பட்ட விளைவு

பிரசல்ஸ், அக். 26—

இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி, இங்கு செய்தியாளர்களிடையே பேசுகையில் கூறியதாவது:—

" வங்காள தேசத்திலிருந்து ஏராளமான அகதிகள் இந்தியாவுக்கு ஓடிவருவதற்கு மேற்கு பாகிஸ்தான் இராணுவத்தின் கொடூர நடவடிக்கைகள் தான் முழுக் காரணமாகும்.

" பாகிஸ்தான் இராணுவத்தின் கொடுஞ்செயல்கள் கண்டு அஞ்சி 90 இலட்சத்துக்கு மேற்பட்ட வங்க தேச மக்கள் இந்தியாவுக்கு வந்திருக்கின்றனர்.

" இப்படி இலட்சக்கணக்கான அகதிகளை நீண்ட காலத்துக்கு அனுமதித்துக்கொண்டிருக்க எங்களால் இயலாது; எங்கள் நாட்டின் நிலையான தன்மையையும் ஒருமைப்பாட்டையும் இது குலைக்கும்."

நெருக்கடி நிலை

திருமதி இந்திரா காந்தி செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:—

" எல்லையில் உள்ள போர் நெருக்கடி நிலை மிக மோசமாகவே உள்ளது; இதில் எந்தச் சந்தேகமும் இல்லை; இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிராகப் பெரும் அச்சுறுத்தல் உருவாகியுள்ளது.

" அகதிகளைத் திருப்பியனுப்பும் பிரச்சினையில் இந்தியா என்ன நடவடிக்கை எடுக்கும் என்று சொல்ல முடியாது; ஆனால் ஒன்றை மட்டும் நிச்சயமாகக் கூறலாம்--பாகிஸ்தான் அகதிகளை இந்தியா தன்னுடன் இணைத்துக்கொள்ளத் தயாராக இல்லை என்பதுதான் அது!"

ஆஸ்திரியாவில் இந்திரா காந்தி

வியன்னு, அக். 27—

ஆஸ்திரிய நாட்டின் அதிபர் -- தலைமை அமைச்சர் ஆகியோருடன் திருமதி இந்திரா காந்தி பேச்சுவார்த்தை நடத்திய போது, இந்திய எல்லைகளில் ஏற்பட்டுள்ள நிலவரம் பற்றி அந்த நாட்டுத் தலைவர்கள் கவலை தெரிவித்தனர்.

" இந்தியாவுக்கு வந்துள்ள வங்காள தேச அகதிகள் பாதுகாப்பாகவும் -- கௌரவமாகவும் தாயகம் திரும்புவதற்கு வகை செய்யும் சூழ்நிலைகள் வங்காளத்தில் உருவாக வேண்டும்" என்ற இந்தியாவின் நிலையை ஆஸ்திரியத் தலைவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இந்திரா காந்தி விளக்கம்

பின்னர், தலைமையமைச்சர் இந்திரா காந்தி, செய்தியாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

" பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளும் தன்மை -- நட்புறவு ஆகியவற்றைத் தவிர வேறு எவற்றையும் எதிர்பார்த்து நான் வரவில்லை.

" போரை இந்தியா விரும்பவில்லை; நெருக்கடி மற்றும் அளவில் எதையும் செய்யவும் இந்தியா விரும்பவில்லை; ஆனால், தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது."

அரசியல் தீர்வுக்குப் போர் ஒரு கருவியல்ல!

வானொலிப் பேட்டி ஒன்றில் திருமதி இந்திரா காந்தி கூறியதாவது:-

" அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் போர் ஒரு கருவியல்ல; ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமையைத் தவிர்ப்பதற்கு முதலில் வழிகோல வேண்டும்; இந்தியாவுக்குத் தொடர்ந்து அகதிகள் வருவது நிற்க வேண்டும் -- இது, முதல் நடவடிக்கையாக இருக்க வேண்டும்.

" இரண்டாவதாக, வங்காள தேசத்திற்கு இசைவான ஓர் அரசியல் தீர்வைக் காண வேண்டும்."

ஊ-தாண்ட் வருகையால் பயன் என்ன ஏற்படும்?

தலைமையமைச்சர் இந்திரா மேலும் கூறியதாவது:—

" வங்காள தேசப் பிரச்சினை பற்றிக் கண்டறிவதற்காக ஐ நா. பொதுச்செயலாளர் ஊ-தாண்ட் இந்தியாவுக்கு வருவதில் ஒரு பயனும் ஏற்படாது; ஆனால், ஊ-தாண்ட் இத்தகைய ஒரு பயணத்தை மேற்கொள்ளுவதை நான் எதிர்க்கவில்லை."

[" இந்தியாவுக்கும் – பாகிஸ்தானுக்கும் ஊ-தாண்ட் வர வேண்டும்" என்று பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் அண்மையில் யோசனை தெரிவித்திருந்தார்.]

" வங்காள தேசப் பிரச்சினைக்கான தீர்வைப் பாகிஸ்தானில்தான் காண வேண்டும் -- இந்தியாவில் அல்ல.

" கிழக்கு வங்காளத்தில் தேர்தலில் பெரும்பாலான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் செயல்பட அனுமதிக்கப்படவில்லை; பிரச்சினையின் துவக்கமே அதுதான் என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும்."

எது நேரிட்டாலும் சரி---உறுதி தளராது

இந்திரா காந்தி உறுதி

இலண்டன், அக். 28—

பிரிட்டிஷ் தொழிற்கட்சியைச் சேர்ந்த முன்னுள் துணையமைச்சர் சால்பாண்ட் பிரபு, இந்தியாவில், திருமதி இந்திரா காந்தியை டெலிவிஷன் பிலிமில் பேட்டிகண்டு-- இந்தியாவுக்குள் வெள்ளம்போல் ஓடிவரும் அகதிகள் பிரச்சினை பற்றி வினவினர்; அதுபோது, தலைமையமைச்சர் குறிப்பிட்டதாவது:—

" அகதிகள் வருவதைத் தடுத்து நிறுத்துவதென்றால், சுட்டுத் தள்ளுவதைத் தவிர வேறுவழி ஏதும் இல்லை; இன்னமும் மேன்மேலும் வந்தவண்ணமிருக்கிறார்கள்.

" ஒவ்வொரு நாளும்—ஒரே மாதிரியான பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளரின் சித்திரவதை அனுபவங்களைச் சொல்லிக்கொண்டு மேன்மேலும் தங்கள் நாட்டவர் வருவதைக் காணும் அகதிகளில் ஒருவராவது திரும்பிப் போவார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

" அகதிகள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வழி, அங்கிருந்து வந்தவர்களுடன் பேசுவது அல்ல; ஆனால் இப்போதைய நிலைமையை எப்படி மாற்றுவது என்று பார்ப்பதுதான் வழி.

" சிலர் கூறுவதுபோல், இது, இந்தியாவுக்கும் -- பாகிஸ்தானுக்குமிடையில் உள்ள தகராறு அல்ல; பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளருக்கும் -- அவர்களுடைய சொந்தக் குடிமக்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள தகராறு ஆகும்.

" ஒருவிதத்தில் இது பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சினையே; ஆனால் 90 இலட்சம் மக்கள் மற்றொரு நாட்டுக்குள் போகும் போது, அது சர்வதேசப் பிரச்சினையாகிவிடுகிறது; பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இது விந்தையான வழி எனத்தோன்றுகிறது; இம்மக்கள் தங்களுக்கு தொல்லையாக இருந்தால், மெல்ல அவர்களை வேற்றுநாட்டுக்கு அனுப்பிவிட்டால் போகிறது என்பதே அவ்வழி; ஆனால் எது நேரிடினும் சரி -- இம்மக்களை இங்கேயே வைத்துக்கொள்ளும் எண்ணம் எங்களுக்கில்லை; இவ்விஷயத்தில் நான் முற்றிலும் உறுதியாக இருக்கிறேன்."

காவிரியில் அணை

மைசூர் தொடர்ந்து கட்டுமாம்

புதுடில்லி, அக். 27—

காவிரியாற்றுக்குக் குறுக்கே அணைகளைக் கட்டுவதற்கான திட்டங்களுக்கு இடைக் காலத் தடையுத்தரவு பிறப்பிக்கக் கோரும் தமிழ்நாடு அரசின் மனுவைத் தலைமை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டதால் ஹேமாவதி, ஹாரங்கி, கபினி நதிகளில் அணைகளைக் கட்டும் வேலைகளை மைசூர் அரசு தொடர்ந்து நடத்தும் என்று தெரிகிறது.

வங்க தேச அகதிகளால் ஏற்பட்டுள்ள பெருஞ் சுமை

சமாளிக்க ரூ. 525 கோடி தேவைப்படும்

தனி நிதியுதவி அளிக்கவேண்டியதன் அவசியம் பற்றி நிதியுதவி நாடுகள் குழு ஆலோசனை

பாரீஸ், அக். 28—

இந்திய உதவி நாடுகள் குழுவின் கூட்டம் பாரிசில் நடைபெற்றது; வங்க தேச அகதிகளால் ஏற்பட்டுள்ள பளுவைச் சமாளிக்க இந்தியாவுக்குத் தனி உதவியளிக்கவேண்டியது அவசியமாகும் என்பதை அது வலியுறுத்தியது.

உலக வாங்கியின் ஆதரவில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

அகதிகள் வருகையால் இந்தியப் பொருளாதாரத்தின் மீது ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்துப் பிரதிநிதிகள் விவாதித்தனர்.

அடுத்த மார்ச் திங்களுடன் முடியும் நிதி ஆண்டில் அகதிகள் நிவாரணத்துக்காக 70 கோடி டாலர் (ரூ 525 கோடி) செலவாகும் என்று இக்கூட்டம் மதிப்பிட்டிருக்கிறது.

உலக பாங்கி தயாரித்துள்ள ஒரு அறிக்கைமீது விவாதம் நடந்தது.

இதுவரை 95 இலட்சத்துக்கு மேற்பட்டுள்ள அகதிகள் வந்துள்ளனர்; அகதிகள் வருவது நீடிக்கிறது; இந்த நிலைமை குறித்தும் -- இதனால் இந்தியாவில் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்படும் கடும் விளைவுகள் குறித்தும் பிரதிநிதிகள் ஆழ்ந்த கவலை தெரிவித்தனர்.

" அகதிகள் நிவாரணத்துக்காக இந்தியாவுக்குத் தரப்படும் உதவியை வழக்கமான வளர்ச்சிக்குத் தரும் உதவியில் சேர்க்கக் கூடாது; தனியாக அகதிகள் நிவாரணத்துக்கென வேறு தரவேண்டும்; அதை மானிய உதவியாகத் தருவது நல்லது" என்று பிரதிநிதிகள் வற்புறுத்தினர்.

80 பிரெஞ்சுப் பிரமுகர்கள் வேண்டுகோள்

நோபல் பரிசு பெற்ற இரு அறிஞர்கள் உட்பட 80-க்கு மேற்பட்ட பிரெஞ்சுப் பிரமுகர்கள், 'பாகிஸ்தானுக்கு அளிக்கப்பட்டு வரும் பொருளாதார உதவியையும், இராணுவச் சாதனங்களையும் உடனடியாக நிறுத்துமாறு பிரெஞ்சு அரசினரைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

வங்க தேச ஆதரவுக்கான பிரெஞ்சுக் குழுவினர் விடுத்துள்ள அறிக்கையில் இந்த வேண்டுகோள் அடங்கியிருக்கிறது.

கல்கத்தாவில் கலைஞர் கருணாநிதி தமிழ் மன்றம்

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும்--தமிழர் நலனுக்கும் --தமிழ்நாட்டின் நலனுக்கும் ஆற்றி வருகின்ற தொண்டினைப் பாராட்டும் வகையிலும், கலைஞர் அவர்கள் 'டாக்டர்' விருது பெற்றதைப் பாராட்டும் வகையிலும், 'டாக்டர் கலைஞர் கருணாநிதி தமிழ் மன்றம்' என்ற ஒரு இலக்கிய கலாச்சார அமைப்பினை, வடக்கு கல்கத்தாவில் வாழ்ந்துவரும் தமிழர்கள் துவக்குகின்றனர்.

இம்மன்றத் திறப்பு விழா 31—10—71 மாலை 6 மணிக்கு (32, பிளாக்பார்ன் லேன், கல்கத்தா 12-ல் உள்ள) மன்ற அலுவலகத்தில் சிறப்புடன் நடைபெறும்.

இம்மன்றத்தை, கல்கத்தா அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கத் தலைவர் திருப்பத்தூர் செ. வீரபத்திரன் துவக்கிவைத்து, அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் ஆகியவர்களின் உருவப் படங்களைத் திறந்துவைப்பார்.

மன்றத் திறப்பு விழாவிற்கு திரு. இ. முஸ்தபா (துணைத் தலைவர் அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கம்) தலைமைவகிப்பார்.

சிவகங்கைத் தொகுதி நாடாளுமன்றத் தி. மு. கழக உறுப்பினர் திரு. தா. கிருட்டினன் எம்.ஏ., அவர்கள், இம்மன்றத்தின் சிறப்புத் தலைமைக் காப்பாளராக இருப்பார்.

பாராட்டு விழா அல்ல-- நான் விரும்புவது!

இந்தியாவின் வெற்றிச் செய்தியே என்னை மகிழ்விக்கும்

சென்னை, அக். 28—

"மத்திய அரசுக்கு ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன; அது, மத்திய அரசுக்கு மட்டும் உரிய பிரச்சினை அல்ல -- இந்திய நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் உள்ள பிரச்சினையாகும். அந்தப் பிரச்சினையில் நமக்குள்ள பொறுப்புக்களை உணர்ந்து -- கட்மைகளை உணர்ந்து. நாம் செய்யவேண்டிய தியாகம் -- எடுக்க வேண்டிய சூளுரை பற்றிச் சிந்தித்து, எதிர் கால அபாயங்களிலிருந்து இந்திய மண்ணை மீட்கவேண்டிய பணியை ஆற்றிட வேண்டும்.

"அனைத்துலக அரசியலில் முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன; இதுவரை அங்கீகரிக்கப்படாத சீனா இப்போது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது -- இதுவரை அங்கீகரிக்கப்பட்டிருந்த சீனா வெளியேற்றப்பட்டிருக்கிறது!

"ஐ. நா. சபையில் சேர்க்கப்பட்ட சீன நாடு--கம்யூனிஸ்டு நாடு; விடுவிக்கப்பட்ட நாடு -- சியாங்-கே-ஷேக் நாடு என்பதிலிருந்து நமக்கும் புரிவது, 'மிகச் சிறுபான்மையினர் துவக்கக் காலத்தில் வாய்ப்பும் வசதியும் பெற்று அங்கீகாரம் பெற்றவர்களாக இருந்தாலும் மிகப் பெரும்பான்மையினர் நிச்சயம் என்றாவது ஒரு நாள் அங்கீகாரம் பெறுவார்கள்--சிறுபான்மையினர் அங்கீகாரம் இல்லாமல் அகற்றப்படுவார்கள்' என்பதுதான்!

"இந்தியாவின் நிலை பற்றி உலகின் பெரு நாடுகள் சிந்திக்க வேண்டும் என்பதற்காக இந்திரா காந்தி உலகப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

"எனக்கு இங்கே அளிக்கப்படும் பாராட்டுகள் பெரிதல்ல -- எடுக்கப்படும் விழாக்கள் பெரிதல்ல; இன்று தோன்றியுள்ள பதட்டமான சூழ்நிலை முற்றி -- இந்தியாவில் போர் மூளாமல் இருக்கும் வழிவகைகளை நாம் தேடிக்கொண்டிருந்தாலும், 'போர் எனும் நெருக்கடியில் நாம் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டோம்' என்றால், இறுதியாக, 'இந்தியா வெற்றியடையும் வகையில் தமிழகத்தின் தியாகம் இருந்தது' என்பதுதான் நான் மகிழும் செய்தியாகும்.

--டாக்டர் கலைஞர்

(பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர் நடத்திய பாராட்டு விழாவில்)

கலைஞருக்கு மத்திய அமைச்சர் மோகன் தாரியா பாராட்டு

பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கள் நடத்திய விழாவில் பங்கேற்பு

சென்னை, அக். 28—

பல்கலைக்கழக ஆராய்ச்சித்துறை மாணவர்கள் சார்பில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றதைப் பாராட்டும் வகையில் நேற்று மாலை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் ஓர் விழா நடைபெற்றது.

மத்தியத் திட்டத் துறைத் துணையமைச்சர் திரு. மோகன் தாரியா இந்த விழாவில் கலந்துகொண்டு கலைஞருக்குப் பாராட்டுரை வழங்கினார்.

தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு. மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்களும் -- ஆராய்ச்சி மாணவர்களும் பாராட்டிப் பேசினர்.

திருக்குறள் தொடர்பான ஆராய்ச்சி நூல்கள் அடங்கிய பரிசினை ஆராய்ச்சி மாணவர்கள் கலைஞருக்கு அளித்தனர்.

உடனே தூதுவரை அனுப்புக!

செஞ்சீனாவுக்கு ஐ. நா. அவசர அழைப்பு

பாதுகாப்புச் சபைத் தலைமைப் பதவிபெறவும் வாய்ப்பு

ஐ. நா., அக். 28—

சீனாவை அனுமதிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதால், விரைவிலேயே தூதுவரை அனுப்பிவைக்கும்படி ஐ. நா. செயலாளர் ஊ -- தாண்ட், சீனாவுக்கு அவசர வேண்டுகோள் அனுப்பியிருக்கிறார்; ஏனெனில், இந்தத் தாமதம் பாதுகாப்புச் சபை நடவடிக்கைகளைப் பாதிக்கக்கூடாது என்பதற்காகவே அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்புச் சபையின் தலைமைப் பதவி இந்தத் தடவை சீனாவுக்குக் கிடைக்கக்கூடும்; இந்தப் பதவி, அடுத்த ஞாயிறு நள்ளிரவுடன் முடிவடைகிறது.

இந்தத் தலைமைப் பதவி அகர வரிசையில் கிடைப்பதாகும்; புதிய ஒரு நாடு இடம்பெற வேண்டுமென்றால், 24 மணி நேரத்துக்கு முன்னதாகச் சான்றுப் பத்திரங்களைத் தாக்கல் செய்யவேண்டும்; ஆகவே, சனிக்கிழமைக்குள் சீனத் தூதுவர் அத்தாட்சிப் பத்திரங்களைத் தாக்கல் செய்யவில்லையென்றால், இந்த ஆண்டு தலைமைப் பதவி போலந்துக்குக் கிடைத்துவிடக்கூடுமாம்.

இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி லிட்., மதுரை

புதிய கட்டிடத் திறப்பு விழா--பொன் விழா

(இடம்: 41, கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு மதுரை)

நாள்: 29--10--1971 வெள்ளிக்கிழமை

இந்நன்னாளில் கூட்டுறவாளர்களுக்கும், சேவை செய்ய வாய்ப்பளித்த பல்லாயிரக்கணக்கான எங்கள் வாடிக்கையாளர்களுக்கும், டிபாசிட்டர்களுக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(வங்கியின் புதிய கட்டிடம்)

மாண்புமிகு முதல்வர் -- கலைஞர் --- டாக்டர்

மு. கருணாநிதி அவர்கள்

மாண்புமிகு -- திரு.

சி. பா. ஆதித்தனார்

எம்.ஏ., பார்-அட்-லா, அவர்கள்

(கூட்டுறவுத் துறை அமைச்சர்)

தலைமையிலும் -

மாண்புமிகு -- திரு.

செ. மாதவன்

பி.காம்., பி.எல்., அவர்கள்

(தொழில் துறை அமைச்சர்)

முன்னிலையிலும்

புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பொன் விழாச் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

இசை விருந்து:

மாலை 3-50 மணி முதல் 5-00 மணி வரை:

மதுரை நாதகான பாஸ்கர நாதஸ்வர வித்வான்

என். அழகுசுந்தரம் குழுவினர்

அதுசமயம், பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு சங்கங்கள் -- மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி நிர்வாகக் குழுவினர்--வங்கி அலுவலர்கள் சார்பாக ரூ. 10,000 நிதி வழங்கப்படும். விழாவிற்கு வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

கோ. சிவராஜன் பி.ஏ., எச்.டி.சி.,
செயலாளர்

சுப. தங்கவேலன்
பெருந் தலைவர்

—நிர்வாகக் குழு. பொன் விழாக் குழு உறுப்பினர்கள்

—ஆத்மாஸ்

சூ-யென்-லாய் ஐ. நா. செல்வார்

தூதுக் குழுவை அனுப்புவதற்குச் செஞ்சீனாவும் தீவிர ஏற்பாடுகள் செய்து வருவதாகத் தெரிகிறது.

தூதுக் குழுவுக்கு சூ-யென்-லாய் தலைமைவகித்துச் செல்லக்கூடும்.

மற்றும் கானடாவில் தூதுவராக இருக்கும் ஹூவாங், முன்னாள் போலந்து தூதுவர் வாங் குவோசுவான் அல்லது துணைத்தலைமையமைச்சர் லீ சீன்-நீன் ஆகியோரின் பெயர்கள் அடிபடுகின்றன.

ஆந்திர அமைச்சரவை

மேலும் 5 பேருக்கு இடம்

ஐதராபாத், அக். 28—

ஆந்திர அமைச்சரவையில் மேலும் ஐந்து புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

புதிய அமைச்சர்கள் ஐவரையும் சேர்த்து ஆந்திர அமைச்சர்களின் எண்ணிக்கை 25-ஆக உயர்ந்திருக்கிறது; இவர்களில் 14 பேர் ஆந்திரப் பகுதியையும், மற்றும் 11 பேர் தெலிங்கானாப் பகுதியையும் சேர்ந்தவர்களாவர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநாட்டிற்கு எல்லா வசதிகளையும் செய்து தர நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று யாழ்ப்பாணம் நகராட்சித் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (26, [illegible] செட்டி தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்பட்டது.